**கொழும்பு மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக்கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து, கொழும்பு மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி 1.6 பந்தியின் 1.6.1(ii) அவதானிப்புகள் தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நியமத்தின் 10.1 பந்தியின் பிரகாரம் இடம் விற்பனை செய்யும் வருமானம் பரிமாற்றக் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் கிடைக்கும் வருவாய் என இணங்காண முடியாதிருந்த போதிலும் அகழ்விரிவான வருமானக் கூற்றில் ரூபா 433,890,613 தொகைக்கான காணிகள் விற்பனை மூலம் வருமானம் பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்களின் மூலமான வருவாய் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் மிகை ரூபா 433,890,613 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமாக காணப்படும் காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்து கிரயத்தை நிதிக்கூற்றுக்களில் இது வரை காட்டப்படாமையால் காணி விற்பனை மூலம் கிடைத்த வருமானத்தின் மூலம் உழைக்கும் மூலதன இலாபத்தை கணித்தல் முடியாதுள்ளது. முறையான செய்முறை ஒன்று எதிர்காலத்தில் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | நியமத்தின் 4.11 பந்தியின் பிரகாரம் முன்னைய காலப் பகுதி தொடர்பான தவறுகளுக்கு உரிய பெறுமதி ரூபா 2,234,233,420 தொகை உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் | சபையின் 65 பிரிவுகள் ஊடாக ஏற்பட்ட தவறுகளை சரி செய்தல் அடங்குவதுடன் எண்ணிக்கை அளவில் பாரிய பெறுமதி ஒன்றினை | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 4.14 பந்திக்கு நேரொத்த |

| | | | |
|---|---|---|---|
| | இணங்காணப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறிய நியமத்தின் 4.14(அ) பந்தியின் பிரகாரம் முன்னைய காலப்பகுதிக்கான தவறின் தன்மையை நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கை மூலம் கிடைத்திருந்த தேறிய காசுப்பாய்சலிலும் முன்னைய காலப்பகுதி தொடர்பான தவறுகளின் பெறுமதி ரூபா 2,234,233,420 மிகை மற்றும் பற்றாக்குறை கணக்கில் சீராக்கல் என காட்டப்பட்டு கூட்டப்பட்டு இருந்தது. அப் பெறுமதி கணிக்கப்பட்ட முறை மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை தொடர்பான விரிவான அட்டவணை ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 2,234,233,420 தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் கிடைத்திருந்த தேறிய காசுப் பாய்ச்சலுடன் கூட்டப்பட்டு காட்டப்பட்டிருப்பதன் சரியான தன்மையினை பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | எடுப்பதனால் ஒவ்வொரு பிழைகளையும் சரி செய்வதற்காக வெவ்வேறாக காரணங்கள் காட்ட முடியாமல் உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | விதமாக ஒவ்வொரு பிரிவின் ஊடாகவும் பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்றினை ஏற்படுத்திக் கொள்வதற்கு சபை ஊழியர்களினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் போது பாதைகள் புனர்நிர்மாண வேலைக்காக அரசு அல்லாத வேறு தரப்பினரிடம் கிடைத்திருந்த ரூபா 35,257,077 தொகைக்கான மூலதனச் செலவு ஒன்று உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 9.14 பிரிவின் பிரகாரம் ஏனைய அகழ்விரிவான வருமானங்களில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு இனங்காணாமல் மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசாங்கத்தின் சாட்டுதலின் கீழ் வருவாய் ஒன்று என இனங்கண்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 35,257,077 இற்கான பெறுமதியினால் மீளாய்வாண்டின் மிகை அதிகரித்திருந்தது. | பாதைகளில் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாண வேலைகளுக்காக செலவுகள் மேற்கொள்வதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 9.10 பிரகாரம் சாட்டுதல் செலவு காலப்பகுதியிற்கான வருவாய் என இனங்காண முடியும். | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 9.14 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏனைய அகழ்விரிவான வருமானங்களை இனங்காணப்பட வேண்டும். |
| (iv) | நியமத்தின் 6 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்வு | பெறுமானத்தேய்வு காலக்கழிவு கழித்தல் 2023 ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (v) | நியம இலக்கம் 6.1 பிரிவின் பிரகாரம் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கும் சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தொகை ரூபா 591,888,944 தொகைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கும் சொத்துக்கள் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என கணக்கீடு செய்யாமல் நிதிக்கூற்றுக்களில் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி மிகை அத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | 65 பிரிவுகள் தொடர்பாக செயற்படும் சபையின் உட்கட்டமைப்பு வசதிகளை மூலதனப்படுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் மீது உட்கட்டமைப்பு வசதிகள் மூலதனப்படுத்தி இருக்காததுடன் எதிர்காலத்தில் செய்முறை ஒன்று தயாரிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு நேரொத்ததாக உட்கட்டமைப்பு வசதிகளை மூலதனப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளல். |
| (vi) | நியம இலக்கம் 6.10 இன் பிரகாரம் அருவச் சொத்துக்கள் காலத்தேய்மானம் செயற்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காலத்தேய்மானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காலத்தேய்மானம் தொடர்பாக சபையினால் கடைபிடிக்கப்படும் நியமங்களின் நிதிக்கூற்றுக்களில், 2.1 இன் கீழும், அது தொடர்பான சபையின் கொள்கை நிதிக்கூற்றுக்களில் 3.3 இன் கீழும் குறிப்பிடப்பட்டுள்ளது. | காலத்தேய்மானம் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அருவச் சொத்துக்களின் கணக்கு வேறாக இனங்காணல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 73 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 1,478,292,803 இற்கான பெறுமதிக்காக நடைமுறை ஆண்டின் போது கடன்கொடுத்தோர் என இனங்கண்டு கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டு நடைமுறை ஆண்டின் போதே அவ்வாறு இனங்காணப்பட்டது சரியானது அல்ல என கண்டறியப்பட்டமையால் அப் பெறுமதி கடன்கொடுத்தோரில் இருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு நேரொப்ப கணக்குகளை சரி செய்யப்படாத காரணத்தினால் ரூபா 670,046,799 தொகையினால் செலவுகளும் ரூபா 808,246,005 தொகையினால் நிலையான சொத்துக்களும் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | முறைமை வழு ஒன்றின் காரணத்தினால் பதிவுகள் சிக்கல் தன்மையாக இருந்தது. | முறைமை வழுக்களை இனங்கண்டு சரிசெய்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வருமானப் பிரிவின் அறிக்கைகளின் படி வர்த்தக அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 13,121,016 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களின் படி அவை ரூபா 22,690,076 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால், ஆண்டிற்கான வருமானம் ரூபா 9,569,060 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களின் பெறுமதியில் முன்னைய ஆண்டுகளுக்காக வருமானங்களும் உட்படுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2.5 பந்தியின் படி நிதிக்கூற்றுக்கள அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | அனுசரணை செயற்திட்டங்களின் கீழ் 2021 ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 29,143,853 இற்கான பரிமாற்ற கொடுக்கல் வாங்கல்களின் மூலமான வருவாய் குறிப்பு இலக்கம் 7 இன் கீழ் இனங்காண வேண்டியிருந்த போதிலும் மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரச சாட்டுதல்கள் குறிப்பு இலக்கம் 5 இன் கீழ் இனங்காணப்பட்டிருந்தது. | சரி செய்தல் மேற்கொள்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. | நியமத்தின் பிரகாரம் செயற்படுதல். |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 07 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதி மற்றும் அதனோடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 398,584,987 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அந்த வித்தியாசங்களுக்கான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 167-1-001-6-3169430 கணக்கிற்கு உரிய வித்தியாசம் 2022 ஜனவரி மாதம் சரி செய்யப்பட்டுள்ளது. ஏனைய செலவுகளுக்குரிய புத்தகங்கள் பரிசோதிக்கப்பட்டு வருவதுடன் விரைவாக தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகள் இடையே வித்தியாசங்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது .இனங்கண்டு சரி செய்தல். |
| (ii) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் படி களஞ்சிய கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 427,183,784 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 200,908,100 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் களஞ்சிய கடன்கொடுத்தோர் ரூபா 226,275,683 தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 427,183,764 இற்கான களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதி சரியானதல்ல. அத்துடன் அட்டவணை 1.4.1.1 இல் காட்டப்பட்டுள்ள கடன்பட்டோர் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ரூபா 200,960,100 சரியானதாகும். | கணினி முறைமைகள் மூலம் பெற்றுக் கொள்ளும் அட்டவணைகள் நாளதுவரையாக பேணிச் செல்லல். |
| (iii) | அறிவித்தல் விளம்பரக் குழுவின் அறிக்கையின் படி அறிவித்தல் பலகை வருமானம் ரூபா 14,466,579 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களின் படி அவை ரூபா 17,931,848 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 3,465,269 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறிவித்தல் பலகை வருமானம் ரூபா 17,931,848 சரியானதாக காணப்படுவதுடன் அதற்குரிய அறிவித்தல் குழுவினால் பேணிச் செல்லப்படும் அட்டவணையை நாளது ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தகவல்கள் நாளதுவரை பேணிச் செல்லல். |
| (iv) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பு இலக்கம் 18 இன் கீழ் வாகனங்களின் பெறுமதி ரூபா | பரிசோதனை மேற்கொண்டு விரைவாக சரி செய்வதற்கு குறித்துக் கொண்டதாக | மோட்டார் வாகனப் பதிவேடு நாளதுவரையாக பேணிச் |

| | | | |
|---|---|---|---|
| | 3,602,043,339 தொகை என காட்டப்பட்டிருந்ததுடன், மோட்டார் வாகன பதிவேட்டின் படி பெறுமதி ரூபா 4,257,355,321 தொகை காணப்பட்டது. அதன் படி ரூபா 655,311,982 தொகை குறைவாக மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டுள்ளது. | செல்லல். |
| (v) | சபையின் கணினி மென்பொருள் முறைமை ஊடாக ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த முறைமையின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பொழிப்பு அறிக்கையின் படி மொத்த ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 7,240,344,597 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களின் படி ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 20,980,036,850 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 13,739,692,253 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் பிழைகளை சரிசெய்து கொள்வதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | கணினி முறைமையை விரைவாக நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020** | | | |
| | நி.பி. 396(ஈ) | ரூபா 37,516,845 தொகை பெறுமதியினை வழங்கப்பட்ட ஆனால் 06 மாதங்களுக்குள் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 550 காசோலைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1987 இன் செப்தெம்பர் 30 ஆந் திகதிய 08 ஆம் இலக்கங் கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் சுற்றறிக்கை | நகர அபிவிருத்தி அதிகார சபையின் பேரில் சேமிப்புக் கணக்கு வங்கிக் கணக்குகள் ஆரம்பிப்பதற்கான குறிக்கோள்களுக்கு புறம்பாக மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி கணக்குகளில் வைப்புச் செய்யப்படும் பணத்தில் ரூபா 721,010,150 இற்கான தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து அந்த நிலையான வைப்புக்களை பிணையாக வைத்து வங்கி மேலதிகப் பற்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட நெருக்கடி நிலைமையின் மீது கொழும்பு மா நகர சபை பாரிய நிதி நெருக்கடிக்கு முகங் கொடுத்திருந்தமையால் சபையின் செலவுகளை தீர்த்துக் கொள்வதற்காக வங்கி மேலதிகப் பற்றின் வரையறையை அதிகரிக்கும் குறிக்கோளுடன் இந்த நிலையான வைப்பு முதலீடு அதற்காக பிணையாக வைக்கப்பட்டது என கருணையுடன் சுட்டிக் காட்டுகின்றேன். அத்துடன் அபிவிருத்தி செயற்திட்ட வேலைகளின் முன்மொழிவுகள் கிடைத்தவுடன் அங்கீகரித்த மேலதிகப் பற்று வரையறையை திருத்திக கொண்டு அந்த நிலையான வைப்பு முதலீட்டுத் தொகைகளை பெற்றுக் கொண்டு அந்த செயற்திட்டங்களுக்கான ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்காக சபைக்கு இயலுமை காணப்படுகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல். |
| (இ) | 1989 மார்ச் 10 திகதிய 10 ஆம் இலக்கங் கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் சுற்றறிக்கை | உள்ளக நிர்மாணவேலைகள், மேலதிக தரை பிரதேச சதவீதம் மற்றும் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு உரிய இடவசதியின்மை தொடர்பாக அபிவிருத்தி செய்வோரிடம் அறவிடப்படும் தொகையில் 25 சதவீதம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாதாந்தம் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்கின் ஆரம்பம் முதல் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அதன் காரணமாக இந்த பணத்துக்கு கொழும்பு மா நகர சபைக்கு தேவையான கிரயத்தின் தொகையொன்று கட்டிட அங்கீகாரத்தின் போது அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள், மேலதிக தரை பிரதேச சதவீதம் மற்றும் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு உரிய இடவசதியின்மை ஆகிய சந்தர்ப்பங்களில் அறவிடப்படும் தண்டப் பணம் இருக்கும் கணக்கிலிருந்து ஒரு பகுதியை பெற்றுக் கொள்ளல் | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்படுகின்றது. அந்த சுற்றறிக்கை இலக்கம் 5/1/50 மற்றும் 1989.03.13 திகதிய சுற்றறிக்கையின் படி அந்தக் கணக்கில் இருந்து 25 சதவீதம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பும் குறிக்கோள் அப் பணத்தில் இருந்து மீண்டும் கொழும்பு மா நகர அபிவிருத்தி வேலைகளுக்கு ஈடுபடுத்தல் என்பதினால் அப் பணத்தை கொழும்பு நகர அபிவிருத்தி வேலைகளுக்கு கொழும்பு மா நகர சபையினால் நேரடியாக ஈடுபடுத்தப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | |
| (ஈ) | 1993 நவம்பர் 18 திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் சுற்றறிக்கையின் பந்தி 4 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக இந்தக் கணக்கில் சேகரமாகியிருந்த ரூபா 782,249,685 தொகைக்கான பணம் குறிக்கோள் சார் எவ்வித அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விஷேட அரச முகவர் கணக்கிற்குரிய வங்கிக் கணக்கில் காணப்படும் மீதிக்கு சமமான மீதியொன்று குறிப்பிட்ட பொறுப்புக் கணக்கிலும் காணப்பட்டதுடன், நடைமுறைக் கணக்கொன்றின் வட்டியின்றி நிதியம் தடுத்து வைத்தல் வெற்றிகரமான நிதி முகாமைத்துவம் அல்லாததினால் அந்தத் தொகையில் ஒரு பகுதி கூடிய வட்டி சதவீதத்தின் கீழ் நிலையான கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டதுடன், அதேபோல் 167100183169429 வங்கிக் கணக்கில் காணப்படும் மீதியான நிதியம் ஏதேனும் அபிவிருத்தி செயற்திட்டம் கிடைத்ததால் அதற்காக பயன்படுத்தும் நோக்கத்தில் பேணிச் செல்வதுடன் அவ்வாறான அபிவிருத்தி செயற்திட்ட முன்மொழிவொன்று இது | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வரை கிடைக்கப் பெறாமையால் இந்த நிதியத்திற்காக பயன்பாடொன்று ஏற்பட்டிருக்கவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (உ) | 2020 ஆகஸ்ட் 27 திகதிய LGD/09/2019(1) இலக்கம் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் கணக்குகள் பேணிச் செல்லல் தொடர்பான சுற்றறிக்கை | வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2021 பாதீடு, சுற்றறிக்கையின் மூலம் அட்டவணைப்படுத்தப்பட்டிருந்த படிவத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், வருடாந்த பாதீடு புதிய கணக்கு நியமத்திற்கு ஒத்த நிகழ்வாக இந்த சுற்றறிக்கையின் மூலம் விதிக்கப்பட்டுள்ள குறியீட்டிலக்கங்கள் மற்றும் படிவங்களை பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 பாதீடு சபைக்கு சமர்ப்பிக்கும் போது அதன்படி, செயற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல். |
| (ஊ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 | | | |
| | (i) பிரிவு 13.2 | ரூபா 165,860,240 தொகை கிரயத்தையுடைய பயன்படுத்த முடியாத 84 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்காக நகர ஆணையாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல். |
| | (ii) பிரிவு 11.1 | சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணம் 756(6) இன் படி<br>• பண்ட கணிப்பீட்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் 2022 ஜூன் 15 திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 ஜூன் 30 திகதி அளவிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>பயன்படுத்த முடியாத பண்டங்கள் தொடர்பாக | நி.பி. 756(6) படி பயன்படுத்த முடியாத பண்டங்கள் தொடர்பான பொருத்தமான விதத்தில் நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன், குறிப்பிட்ட தினத்தில் பூர்த்தி செய்ய முடியாமல் போனது நாட்டில் காணப்பட்ட நிலைமை காரணமாக உத்தியோகத்தர்களை கடமைக்கு அழைத்தல் வரையறுக்கப்பட்டிருந்தமை மற்றும் சபைக்கு சொந்தமான ஆதனங்கள் பொறித்தொகுதிகள் எண்ணிக்கையும் | சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுத்தல் 2022 ஏப்ரல் 30 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 ஜுன் 30 அளவிலும் அந்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மிகையாக காணப்பட்டமையால் ஆகும். |

### 1.7.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணக்கமின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலப் பகுதி தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டிருந்த வரி அறிக்கையின் படி 2021 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரி ரூபா 627,440,441 தொகையினை தீர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணினி தகவல் முறைமையினை தேவையானவாறு தயாரித்துக்கொள்வதற்கு முடியாமல் போனமையால் 2016 – 2019 தகவல்களை சமர்ப்பிப்பதற்கு முடியாமல் போனது எதிர்காலத்தில் வருமான வரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்வுகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான வரி அறிக்கைகள் கால ரீதியாக சமர்ப்பித்தல் மற்றும் செலுத்த வேண்டிய நிலுவை வரியை விரைவாக செலுத்தி தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 570,693,595 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் சபையின் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 366,815,280 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருமானம் சேகரித்தல் கணக்குகள் தொடர்பாக மீதி மறைப் பெறுமதி ஒன்றினை கொண்டிருக்க முடியாது எனினும் 236-1-001-9-3478543 இலக்கம் கொண்ட கணக்கிற்குரிய 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் ரூபா 5,611,732 இற்கான மறை மீதியொன்று என காட்டப்பட்டிருந்தது. | 2016 கணினி முறைமையில் ஏற்பட்டிருந்த சிக்கல் காரணமாக மறை மீதியொன்று என காட்டப்பட்டிருந்ததெனவும், எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரி** | | |
| 2021 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு மொத்த வீதவரி எண்ணிக்கை ரூபா 4,202,014,333 தொகை ஆக காணப்பட்டது. அந்த மொத்த நிலுவை வீதவரி மீதியில் ஐந்து இலட்சங்களை மிகைத்துள்ள 1121 ஆதனங்களில் காணப்பட்டதுடன், அதன் நிலுவை வீதவரி எண்ணிக்கை ரூபா 1,893,978,890 ஆக இருந்தது. அதேபோல் இந்த நிலுவை ஆதனங்களின் 166 ஆதனங்கள் அரச ஆதனங்களாக காணப்பட்டதுடன், அதன் நிலுவை ரூபா 504,395,533 ஆக இருந்தது. இந்த ஆதனங்களில் 812 ஆதன அலகுகள் 2021 ஆண்டில் நிலுவைத் தொகை ஏதும் செலுத்தியிருக்கவில்லை. ரூபா 10 மில்லியனை மிகைத்துள்ள நிலுவை வீதவரி ஆதனங்களின் எண்ணிக்கை 24 ஆக காணப்பட்டதுடன், அதன் பெறுமதி ரூபா 445,568,243 தொகையாக காணப்பட்டது. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) நடைபாதை கடைவாடகை** | | |
| 2021 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நடைபாதை கடைவாடகை வருமானம் ரூபா 602,373,386 தொகையாக காணப்பட்டதுடன், அப் பெறுமதி ஆண்டிற்கான சிட்டையிடலில் 647 சதவீதமாக காணப்பட்டது. இந்த நிலுவைப் பெறுமதியில் ரூபா 163,207,567 தொகைக்கான செயற்படாத நடைபாதை கடை வாடகையும் உள்ளடங்கியிருப்பதுடன், இந்த எண்ணிக்கையை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விரைவாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல். |

**(இ) வீட்டு வாடகை**

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு தொடர் வீட்டுத் திட்டங்களிலிருந்தும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வீட்டு வாடகை ரூபா 21,298,843 தொகையாக இருந்தது. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விரைவாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் ரூபா 481,617,786 இற்கான பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு 2021 நவம்பர் 30 திகதி கொழும்பு மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த கொம்பனித் தெரு கழிவு நீர் பம்பு நிலையம் செயற்படாத நிலைமையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. பம்பு நிலையம் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப பரிசோதனையின் போது நிலையம் அறை மற்றும் தொடர்புடைய உயர் அழுத்த குழாய் முறைமையில் சேதம் ஏற்படல் இதற்கான காரணமாக இருந்தது. அதேபோல் கொம்பனித்தெரு கழிவு நீர் பம்பு நிலையத்தில் சேகரமாகும் கழிவு நீர் திறந்த வடிகால் ஒன்றினூடாக பேரைவாவிக்கு விடுவிக்கப்படுவதன் மூலம் பாரிய சுற்றாடல் சேதமொன்று ஏற்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | இந்த செயற்திட்டத்திற்காக ஏற்பாடுகள் நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் மூலம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினூடாக வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும் நிதியம் வழங்குதல் தொடர்ந்தும் தாமதம் அடைந்திருந்தது. குழாய் முறைமையின் சேதமடைந்த பகுதிகளின் திருத்த வேலைகள் மேற்கொண்டு பம்பு நிலையத்தினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். | உயர் அழுத்த குழாய் முறைமையை விரைவாக திருத்த வேலை மேற்கொண்டு பம்பு நிலையத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | வாகன தரிப்பிடக் கட்டணம் அறவீடு செய்வதற்காக ஒப்பந்த வேலைகள் பெற்றுக்கொண்ட தனியார் நிறுவனங்களினால் நகர சபைக்கு செலுத்த வேண்டியிருந்த மாதாந்த வாடகை செலுத்துதல் தொடர்ந்தும் புறக்கணித்திருந்ததுடன், 2021 | பதில் வழங்கியிருக்கவில்லை. | கால தாமதம் இன்றி நிலுவை கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 38 நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைக் கட்டண வருமானம் ரூபா 265,499,052 தொகையாக காணப்பட்டது. | | |
| (இ) | தெரிவு செய்யப்பட்ட அதிகாரப் பிரதேசம் ஒன்றில் தரிப்பிட மனு பொறுத்துவதன் மூலம் மோட்டார் வாகனங்கள் நிறுத்துவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குறிப்பிட்ட நிறுவனத்தில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை வருமானம் ரூபா 101,771,107 தொகையாக இருந்தது. 2016 ஆண்டிலிருந்தே உரிய முறையில் வாடகைத் தொகையை செலுத்தாமையால் 2021 ஏப்ரல் 07 திகதி குறிப்பிட்ட நிறுவனத்துடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையை இடைநிறுத்துவதற்காக நகர சபை நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், 2022 ஏப்ரல் 30 திகதி அளவிலும் அந்தப் பகுதிகளில் வாகனத் தரிப்பிடக் கட்டணம் அறவீடு செய்வதற்காக மாற்றுச் செய்முறையொன்று தயாரித்திருக்கவில்லை. அதன்படி, ஒரு வருடத்திற்கு அண்மித்த காலத்திற்காக நகர சபைக்கு சுமார் ரூபா 66,724,488 இற்கான வருமானம் ஒன்று இழக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | கால தாமதம் இன்றி நிலுவை கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

## 3.2 செயற்றிட்ட வேலைகளின் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் 3348/3349 இன் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிக்கும் கருமத்திற்காக வெள்ளவத்தை ருத்ரா விளையாட்டுத் திடலினை வழங்கப்படுவதற்கு 2009 செப்தம்பர் 28 திகதிய 543 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் கொழும்பு மா நகர சபையின் அதிகார கருமங்கள் மற்றும் பணிகள் நிறைவேற்றும் அதிகாரி, பிரதான நகர நிருவாகியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, ரூபா | இந்த தாமதங்களின் காரணமாக மேலதிக கிரயம் ஒன்று மேற்கொள்ள நேரிட்டுள்ளதென என்பதை ஏற்றுக்கொள்வதுடன், இந்த விடயத்தில் செயற்றிட்ட அலுவலகம் மற்றும் அதற்கான நிறுவன மட்டத்தில் எடுக்கக் கூடிய செயற்பாடுகள் எடுக்கப்பட்ட போதிலும் வெளி | கொள்கை உதவி குழுமங்களின் உத்தியோகத்தர்கள், செயற்றிட்ட உத்தியோகத்தர்கள், பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் வினைத்திறனுடன் செயற்பட்டு சிக்கல்களை தீர்த்து செயற்றிட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | 4,360,779,986 இற்கான பெறுமதி கூட்டிய வரி இன்றிய பெறுமதிக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக திட்டமிடல், நிர்மாணித்தல் மற்றும் செயற்பாடுகளை செயற்படுத்துதல் அடிப்படையில் 2021 ஒக்தோபர் 11 திகதி முத்தரப்பு உடன்படிக்கை ஒன்றிற்கு அனுகியிருந்தது. 2021 மார்ச் 18 திகதி காணி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 மார்ச் 31 திகதி வரையும் இந்த காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக ஒப்பந்த வேலை செயற்படுத்துவதற்கான திட்டத்தின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டிய கருமங்களை நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தது. உத்தேச காணி ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஒப்பந்தக்காரரின் மேலதிக கிரயத்தின் மீது மேற்கொள்ளப்படும் உரிமை கோரள் காரணத்தினால் பாரிய தொகையொன்று செயற்திட்ட குறிக்கோள்களுக்கு புறம்பான விடயங்களுக்காக செலவிடுவதற்கு நேரிட்டிருந்தமை உயர் ஆபத்து நிலைமை ஒன்று காணப்பட்டதுடன், செயற்திட்டம் தாமதம் அடைந்ததனால் கிரயம் அதிகரித்தல் மற்றும் பணம் போதியளவாக காணப்படாமை மற்றும் செயற்திட்டக் காலம் முடிவடைதல் மீது செயற்திட்டத்தை கைவிடுவதற்கு நேரிடுகின்ற ஆபத்து நிலைமையொன்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. அதேபோல் ரூபா 30,229 மில்லியன் செலவிடப்படும் ஒட்டுமொத்த கழிவு நீர் செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்படும் ஒரே ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் இந்த செயற்திட்டம் காணப்பட்டமையால் இது வெற்றியடையாமையினூடாக ஒட்டுமொத்த செயற்திட்டமும் வெற்றியடையாமைக்கான ஆபத்து நிலைமை ஒன்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | நிறுவனங்களுடன் செயற்படும் போது ஏற்படுகின்ற தாமதங்கள் இதற்கான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | விரைவாக பூர்த்தி செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் இலக்கம் 3348/3349 இன் கீழ் ரூபா 717,054,675 இற்கான தலகொடுவ பம்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக உத்தேச காணி ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைப்பதில் ஏற்பட்ட தாமத்தினால் ஒப்பந்தக்காரருக்கு மேற்கொள்ள நேரிட்டிருந்த மேலதிக கிரயத்திற்காக ரூபா 3,071,262,126 இற்கான உரிமை கோரல் | இந்த தாமதங்களின் காரணமாக மேலதிக கிரயம் ஒன்று மேற்கொள்ள நேரிட்டுள்ளதென என்பதை ஏற்றுக்கொள்வதுடன், இந்த விடயத்தில் செயற்திட்ட அலுவலகம் மற்றும் அதற்கான நிறுவன மட்டத்தில் எடுக்கக் கூடிய | கொள்கை உதவி குழாம்களின் உத்தியோகத்தர்கள், செயற்திட்ட உத்தியோகத்தர்கள், பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் வினைத்திறனுடன் |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த பொறியியலாளர் அதற்கு இணங்காமையால் தகராறு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தகராறு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பின்னர் ஒப்பந்தக்காரர் ரூபா 1,050,015,153 இற்கான உரிமை கோரல் மேற்கொண்டிருந்ததுடன், செயற்திட்ட பொறியியலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தாமதக் கட்டணக் கொடுப்பனவு ரூபா 261,286,732 தொகையாக இருந்தது. அதன்படி, சச்சரவு தீர்க்கப்பட்டிருக்காமையால் நடுத்தீர்ப்பு செயற்பாடிற்காக அனுப்பப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கருமங்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யாமையால் வெளிநாட்டு கடன் செயற்திட்டங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பணம் வினைத்திறனுடன் செயற்திட்ட கருமங்களுக்காக பயன்படுத்த முடியாத ஆபத்து நிலைமை ஒன்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | செயற்பாடு எடுக்கப்பட்ட போதிலும் வெளி நிறுவனங்களுடன் செயற்படும் போது ஏற்படுகின்ற தாமதங்கள் இதற்கான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | செயற்பட்டு சிக்கல்களை தீர்த்து செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல். |
| (இ) செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்களை விரைவாக தீர்ப்பதற்காக கொழும்பு மா நகர சபை உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் மேல் மாகாண சபை உத்தியோகத்தர்களைக் கொண்ட கொள்கை உதவிக் குழுவொன்று 2010 ஆண்டு முதல் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், 2021 திசெம்பர் 31 திகதி வரை அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 41,236,786 தொகை படியாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ஆசிய அபிவிருத்தி கழிவு நீர் முகாமைத்துவ ஒட்டுமொத்த செயற்திட்டமும் 2021 திசெம்பர் 31 திகதி அளவில் மெதுவாக செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களாக மாறியிருந்தது. விபரங்கள் கீழ் வருமாறு ஆகும். | | |
| i. கடன் உடன்படிக்கை இலக்கம் 2557/2558 இன் கீழ் ரூபா 12,597.11 மில்லியன் கிரயத்திற்கான பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம் 2010 ஏப்ரல் 04 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2015 ஜூன் 30 திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், செயற்திட்டம் முடிவடையும் திகதி 2022 திசெம்பர் 31 திகதி வரை | விலைகூறல் மதிப்பாய்வு தாமதம் அடைதல் பெறுகை செய்முறை தாமதம் அடைதல், வெளிநாட்டுக் கம்பனிகளை ஈடுபடுத்துவதற்கு நேரிடல், பழைய சாக்கடை முறைமை ஒன்றாக காணப்பட்டமையால் தகவல்கள் பெற்றுக்கொள்வதில் | நிலுவை வெளிநாட்டு முதலீடுகளின் மூலம் உச்சமட்ட பயன் பெறுவதற்காக செயற்படுதல், உத்தியோகத்தர்கள் உயிர்ப்புடன் பங்களிப்புச் செய்தலை அளவை செய்வதற்காக செய்முறை ஒன்று தயாரித்தல், |

| | | | |
|---|---|---|---|
| | அதாவது 90 மாதங்கள் தாமதமடைந்திருந்தது. | வசதியீனங்கள், ஒப்பந்தக்காரரின் பலவீனம் போன்ற காரணங்களினால் தாமதம் அடைந்திருந்தது. | தீர்மானம் எடுக்கும் செய்முறையை விரைவுபடுத்தல். |
| ii. | கடன் உடன்படிக்கை இலக்கம் 3348/ 3349 இன் கீழ் ரூபா 16,401.76 மில்லியன் கிரயத்தையுடைய நிகழ்ச்சித் திட்டம் 2016 இன் நவம்பர் 30 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட கருமங்கள் பூர்த்தி செய்ய முடியாமையினால் 2022 ஒக்தோபர் 24 திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | விலைகூறல் மதிப்பாய்வு தாமதம் அடைதல் பெறுகை செய்முறை தாமதம் அடைதல், வெளிநாட்டுக் கம்பனிகளை ஈடுபடுத்துவதற்கு நேரிடல், பழைய சாக்கடை வடிகால் முறைமை ஒன்றாக காணப்பட்டமையால் தகவல்கள் பெற்றுக்கொள்வதில் வசதியீனங்கள், ஒப்பந்தக்காரரின் பலவீனம் போன்ற காரணங்களினால் தாமதம் அடைந்திருந்தது. | நிலுவை வெளிநாட்டு முதலீடுகளின் மூலம் உச்சமட்ட பயன் பெறுவதற்காக செயற்படுதல், உத்தியோகத்தர்கள் உயிர்ப்புடன் பங்களிப்புச் செய்தலை அளவை செய்வதற்காக செய்முறை ஒன்று தயாரித்தல், தீர்மானம் எடுக்கும் செய்முறையை விரைவுபடுத்தல். |
| iii. | கடன் உடன்படிக்கை இலக்கம் 3030 கீழ் ரூபா 1,230.60 மில்லியன் கிரயத்தையுடைய நிகழ்ச்சித் திட்டம் 2014 ஜுன் 03 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 ஜுன் 30 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட கருமங்களை பூர்த்தி செய்ய முடியாமையினால் 2022 ஒக்தோபர் 24 திகதி வரை காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | விலைகூறல் மதிப்பாய்வு தாமதம் அடைதல் பெறுகை செய்முறை தாமதம் அடைதல், வெளிநாட்டுக் கம்பனிகளை ஈடுபடுத்துவதற்கு நேரிடல், பழைய சாக்கடை வடிகால் முறைமை ஒன்றாக காணப்பட்டமையால் தகவல்கள் பெற்றுக்கொள்வதில் வசதியீனங்கள், ஒப்பந்தக்காரரின் பலவீனம் போன்ற காரணங்களினால் தாமதம் அடைந்திருந்தது. | நிலுவை வெளிநாட்டு முதலீடுகளின் மூலம் உச்சமட்ட பயன் பெறுவதற்காக செயற்படுதல், உத்தியோகத்தர்கள் உயிர்ப்புடன் பங்களிப்புச் செய்தலை அளவை செய்வதற்காக செய்முறை ஒன்று தயாரித்தல், தீர்மானம் எடுக்கும் செய்முறையை விரைவுபடுத்தல். |
| (ஈ) | கடன் இலக்கம் 2557/2558 மற்றும் கடன் இலக்கம் 3348/3349 தொடர்பாக 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பல்வேறு காரணங்களினால் சச்சரவு சபைக்கு மற்றும் நடுத்தீர்ப்பிற்கு ரூபா 7,268,516,296 பெறுமதியான 07 சம்பவங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த பெறுமதி ஒட்டுமொத்த செயற்திட்டங்களின் பெறுமதியின் 24 சதவீதமாக காணப்பட்டதுடன், இந்த நிலைமை செயற்திட்ட முகாமைத்துவ பலவீனம் ஒன்றென அவதானிக்கப்பட்டது. அதன்படி செயற்திட்டம் தோல்வியடையக்கூடிய தீவிர ஆபத்து நிலையொன்று காணப்பட்டதுடன் எதிர்பார்த்த செயற்திட்ட கருமங்களை பூர்த்தி | ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்த உரிமைகோரல் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பலவீன ஒப்பந்த முகாமைத்துவத்தின் காரணமாக நடைபெறுகின்றது என கருதக்கூடாது என அறிவிக்கப்பட்டிருந்தது. | கொள்கை உதவி தொகுதிகளின் உத்தியோகத்தர்கள், செயற்திட்ட உத்தியோகத்தர்கள், பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் வினைத்திறனுடன் செயற்பட்டு சிக்கல்களை தீர்த்து செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | செய்துகொள்வதற்கு முடியாமையினால் செயற்திட்டம் தோல்வியடையும் ஆபத்து நிலைமை ஒன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | 2013 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை காலப்பகுதிக்குரிய வடிகாலமைப்பு பிரிவினால் வழங்கப்பட்ட ரூபா 1,075,286,017 தொகைக்கான 19 செயற்திட்டங்களின் ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் அவற்றின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த 19 செயற்திட்டங்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்பட்ட சதவீதம் 5 முதல் 90 சதவீதம் வரையான வீச்சை கொண்டிருந்தது. | இணங்கியுள்ளது. பல்வேறு காரணங்களினால் தாமதங்கள் ஏற்பட்டது எனவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | செயற்திட்டங்கள் தாமதமடைதலுக்கான காரணத்தை பரிசோதனை செய்து அதற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் உத்தியோகத்தர்களின் செயலாற்றல்களை அளவை செய்யும் போது இந்த நிலைமையை கவனத்தில் எடுத்தல் தாமத செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1958 ஒக்தோபர் 07 திகதிய 415 ஆம் இலக்க உடன்படிக்கை மூலம் இலக்கம் 45, மாகஸ் ப்ரனாந்து மாவத்தையில் அமைந்துள்ள காணியில் 4 ஏக்கர் 1 ரூட் 29.8 பர்சஸ் அளவான காணி இலங்கை டெனிஸ் சங்கத்துக்கு மாதாந்தம் ரூபா 100 வாடகைக்கு 25 வருடங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 1983 செப்தெம்பர் 30 திகதி இந்த குத்தகை உடன்படிக்கை காலம் முடிவடைந்த போதிலும் 2022 ஆகஸ்ட் 31 திகதி வரை முறையான குத்தகை உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகி இருக்காததுடன் சட்டரீதியான உடன்படிக்கை ஒன்றின்றி டெனிஸ் சங்கம் காணியை பயன்படுத்தி வருகின்றது. அதே போல் மேற்கூறிய காணிக்கு மேலதிகமாக 55 பர்சஸ் விளைச்சலினைக் கொண்ட காணி ஒன்று 1958 ஆண்டு முதல் வாடகை ஏதும் செலுத்தாமல் டெனிஸ் சங்கத்தினால் அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. 2022 ஜூன் 30 திகதியளவில் டெனிஸ் சங்கத்தினால் அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூபா 30,075,662 தொகையாகக் காணப்பட்டது. | குத்தகைக்கு கொடுப்பதற்கு 2021 ஒக்தோபர் 22 திகதிய பொதுக் கூட்டத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் கௌரவ ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை குத்தகை அறவீடு செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் முறையான உடன்படிக்கை ஒன்றினை அணுகுவதற்கு செயற்படுதல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காணிப் பதிவேட்டின் படி 168 காணிகள் நகர சபைக்கு சொந்தமானவை என காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த காணிகளின் உரிமையை சபைக்கு உரித்தான முறை அல்லது நகர சபைக்கு உரிய காணிகள் என உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. 06 காணிகளில் அங்கீகாரமற்ற வதிவோர்கள் காணப்படுகின்றனர் எனவும் கண்டறியப்பட்ட போதிலும் 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் அது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சபைக்கு சொந்தமான 14 விழா மண்டபங்களில் 6 இன் தகவல்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட காணிப் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ளதுடன் சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சபை ஒன்று என்ற வகையில் கொள்கைசார் தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு எதிர்ப்பார்ப்பதுடன் குத்தகை ஆதனங்கள் காணிப் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | சபையின் ஆதனங்கள் தொடர்பாக முறையான தொடர் நடவடிக்கை செய்முறை ஒன்று தயாரித்தல். |
| (இ) | முன்னைய அறக்கொடை ஆணையாளருக்கு 2017 மே 30 திகதி இலக்கம் 1/E மாலிகாகந்தையில் அமைந்துள்ள அறக்கொடை ஆணையாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி 2017 மே 30 திகதி முதல் 2020 ஜனவரி 14 திகதி வரையான காலப் பகுதிக்காக தாபனக்கோவையின் XIX அத்தியாயத்தின் பிரிவு 5.3.1 இன் பிரகாரம் வீட்டு வாடகை என உத்தியோகத்தரின் சம்பளத்தில் இருந்து மாதாந்தம் 10 சதவீதம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் மாதாந்தம் ரூபா 3,750 தொகை சிக்கன வாடகை என அறவிடப்பட்டிருந்தது. அதன்படி முன்னைய அறக்கொடை ஆணையாளரின் வீட்டு வாடகை சரியாக கணக்கிடப்பட்டு கணக்காய்வுத் திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. அதே போல் அவர் 2020 ஜனவரி 14 திகதி முதல் கொழும்பு மா நகர சபையில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த போதிலும் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் உடைமையை 2021 ஜனவரி 12 திகதி வரை ஒப்படைக்காமையால் தாபனக் | இணங்குகின்றேன். | விரைவாக நிலுவை வாடகை மற்றும் தண்ட வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | கோவையின் XIX அத்தியாயத்தின் பிரிவு 7.2 இன் பிரகாரம் அக் காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய தண்ட வாடகையும் 2021 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | | |
| (ஈ) | முன்னால் பிரதி நகர பொருளாளருக்கு உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வழங்கப்பட்ட நாள் முதல் சபையின் சேவையில் இருந்து இடமாற்றம் பெற்று சென்ற நாள் வரையான காலப்பகுதிக்காக தாபனக்கோவையின் அத்தியாயம் XIX இன் பிரிவு 5.3.1 இன் பிரகாரம் வீட்டு வாடகை உத்தியோகத்தரின் சம்பளத்தில் இருந்து மாதாந்தம் 10 சதவீதம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் மாதாந்தம் ரூபா 2,500 மாத்திரம் வீட்டு வாடகை என அறவிடப்பட்டிருந்தது. அதன் படி முன்னால் நகர பொருளாளருக்கு வீட்டு வாடகையை சரியாக கணித்து நிலுவை வீட்டு வாடகை 2021 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் சபை சேவையில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள நாள் முதல் மீண்டும் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை ஒப்படைக்கப்பட்ட நாள் வரையான காலப்பகுதிக்காக தாபனக் கோவையின் அத்தியாயம் XIX இன் பிரிவு 7.2 பிரகாரம் தண்டவாடகை சரியாக கணிக்கப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெண் உத்தியோகத்தர் அட்டவணை இடப்பட்ட வீடு ஒன்றில் வதியாமையால் சம்பளத்தில் 12.5 சதவீதம் மற்றும் தண்ட வாடகை அறவீடு செய்வதற்காக பாதுகாப்பு ஜெனராலுக்கு அறிவிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விரைவாக நிலுவை வாடகை மற்றும் தண்ட வாடகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் தாபனக் கோவையின் அத்தியாயம் XIX இன் பிரிவு 7.2 இன் பிரகாரம், 2012 ஜனவரி 01 திகதி முதல் 2015 ஜனவரி 14 திகதி வரை முன்னால் நகர ஆணையாளர் இடமாற்றம் பெற்றுச் சென்ற பின்னர் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை திருப்பி சபைக்கு ஒப்படைக்காமையால் தண்ட வீட்டு வாடகை என அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா இரண்டு மில்லியன் நூற்றி ஐம்பத்திநான்கு ஆயிரத்து அறுநூற்றி எண்பத்தி ஒன்று (ரூபா 2,154,681) தொகை ஒன்று அறவீடு செய்திருக்கவில்லை. | 1978 உள்ளூராட்சி உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் உடைமையை திருப்பிப் பெறல் ஏற்பாடுகளின் படி பெண் உத்தியோகத்தர் தொடர்பான அலுவல்கள் மேற்கொள்ளல் சிக்கல் தன்மையுடன் காணப்படுகின்றது. அதன் படி பெண் உத்தியோகத்தரிடம் தண்ட வாடகை அறவீடு செய்வதற்கு இயலுமை காணப்படவில்லை. | விரைவாக தண்ட வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | சபை அங்கத்தவர்களின் வாகனங்களுக்காக பணம் அறவீடு செய்யாமல் அவர்களின் அலுவலகங்களுக்கு முன்னர் நிறுத்தி வைப்பதற்காக அங்கீகாரம் வழங்கள் சபையின் வழமையான செயற்பாடொன்றாக காணப்பட்ட போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது 51 மந்திரிமார் தமது வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடங்களில் வேறு நபர்கள் வர்த்தக நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது. அதே போல் கோவைகளை பரிசோதனை செய்த போது மந்திரிமார் அந்த இடங்களில் தமது அலுவலகத்தை நடாத்திச் செல்வது என்பதை உறுதிப்படுத்துவதற்காக அந்த விலாசங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமையாளர்களிடம் மேற்கொண்டிருந்த குத்தகை உடன்படிக்கை சத்தியப் பிரமாணம் அல்லது வேறு ஏதும் வகையிலான சட்ட ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக கொள்கைசார் தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | முறையான செய்முறை ஒன்று விரைவாக செயற்படுத்தல். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் நகர முதல்வர் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 7,934,518 தொகை பெறுமதியான உபகரண விடயங்களில் தெரிவு செய்யப்பட்ட மாதிரி ஒன்றினை 2021 திசெம்பர் 30 திகதி பௌதீக ரீதியாக பரிசோதனை செய்யப்பட்டது. எனினும் முறையான நிலையான சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்காமையால் தெரிவு செய்யப்பட்ட மாதிரி தொடர்பாக முழுமையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ள முடியாமல் இருந்தது. அதே போல் முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டு வந்திருக்காமையால் பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலையான சொத்துப் பதிவேடொன்று உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்லல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டு கொழும்பு மா நகர சபைக்கு 2013 ஆண்டு மற்றும் 2019 ஆண்டு காலவீச்சில் ஒப்படைக்கப்பட்டிருந்த 18 செயற்திட்டங்களை முறைப் பிரகாரம் ஒப்புக்கொண்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அதன் படி செயற்திட்டத்தின் மூலம் ஆக்கப்பட்ட சொத்து நிதிக் கூற்றுக்களில் சொத்துக்கள் என இனங்காணப்பட்டதனவா அல்லனவா என உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | எதிர்காலத்தில் இந்த 18 சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கீழ் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 04 பம்பு நிலையங்கள் கொழும்பு மா நகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த 4 பம்பு நிலையங்களிலும் காணப்படுகின்ற இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வகைப்படுத்தி ஒவ்வொரு பம்பு நிலையங்களின் நிதிக் கிரயத்துடன் எழுத்துமூலம் 2022 மார்ச் 31 திகதியளவிலும் ஒப்படைத்திருக்கவில்லை. | பூர்த்தி செய்யப்பட்ட பம்பு நிலையங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கிரயங்களை எதிர்காலத்தில் இனங்கண்டு அறிவிக்க நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | சுபைக்கு சொந்தமான ஸ்னோகல் வாகனத்திற்கு 2018 ஏப்ரல் 27 திகதி ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக நி.பி. 104(3) பிரகாரம் முழுமையான அறிக்கை சுமார் 30 மாதங்களுக்கு பின்னர் 2020 அக்தோபர் 12 திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. காப்புறுதி உரிமை பெற்றுக் கொள்வதற்காக உரிமை படிவம் விபத்து ஏற்பட்டு 14 நாட்களுக்குள் காப்புறுதி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டியிருந்த போதிலும் விபத்து ஏற்பட்டு 600 நாட்கள் கால தாமதத்தின் பின்னர் உரிமை கோரல் படிவம் ஒப்படைக்கப்பட்டு இருந்தமையால் காப்புறுதி நிறுவனம் இணங்கியிருந்த காப்புறுதி உள்ளடக்கத்திலிருந்து ரூபா 596,849 தொகை குறைவாக செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | பொறுப்பு சொல்ல வேண்டியவர்களை தீர்மானித்து சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல். |
| (உ) | பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,159,879 தொகை பெறுமதியான நிதி மற்றும் முகாமைத்துவக் | பயிற்சி பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் காணப்படாமையால் செயற்படுத்தப்படாமல் | பொறுப்பு சொல்ல வேண்டியவர்களை இனங்கண்டு ஒழுக்காற்று செயற்பாடுகள் எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு முறைமை கொழும்பு மா நகர சபையின் சாக்கடை தேவைப்பாட்டிற்காக 2014 ஆண்டின் போது ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆண்டு முதல் அந்த முறைமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | காணப்படுவதுடன், ஆலோசனை சேவை ஒன்று மூலம் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மற்றும் விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஊ) | சபையின் இலக்கம் ந.பொ/களஞ்சியக் கணக்கு/01/2021 இலக்கங் கொண்டு 2021 நவம்பர் 23 திகதிய சுற்றறிக்கையின் பிரிவு 5.7 இன் பிரகாரம் கணிப்பீடு முடிவடைந்த பின்னர் அந்த அறிக்கைகளை பரிசோதனை செய்து பற்றாக்குறைகள் காணப்படின் அந்தப் பண்டங்களின் பெறுமதியினை குறிப்பிட்ட உத்தியோகத்தரிடம் அறவீடு செய்வதற்காக திணைக்களத் தலைவர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 2022 பெப்ரவரி 25 திகதிக்கு முன்னர் நகர பொருளாளருக்கு அறிவிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் படி திணைக்களத் தலைவர்களை பற்றாக்குறை தொடர்பாக எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த அலுவல்களை பூர்த்தி செய்வதற்கு குறித்துக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 பெப்ரவரி 17 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த கூறுவிலை அழைத்தலின் படி ரூபா 61,375,369 இற்கான குறைந்த விலை சமர்ப்பித்திருந்த ஒப்பந்தக்காரருக்கு முதுவெல்ல விளையாட்டுத் திடல் அபிவிருத்தி செய்தல் மற்றும் விளையாட்டு மண்டபம் நிர்மாணிக்கும் ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்ததுடன், 2018 ஜூன் 18 திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 05 சந்தர்ப்பங்களில் மேலதிகமாக 667 நாட்கள் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் படி 2019 ஜூலை 27 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2021 | இந்த ஒப்பந்தவேலை தொடர்பாக இணக்கஞ் செய்தல் நடுத்தீர்ப்பு செய்முறையொன்று செயறபடுத்தப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | நடுத்தீர்ப்பின் படி செய்முறையை விரைவா பூர்த்தி செய்து ஒப்பந்தவேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

திசெம்பர் 31 திகதி அளவில் ஒப்பந்தக்காரருக்கு வரியுடன் ரூபா 30,143,490 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், இது மொத்த ஒப்பந்தவேலை கிரயத்தின் சுமார் 42 சதவீதம் ஆகும்.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பி முதலீட்டு வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் மூலம் நிதியுதவி வழங்கும் அடிப்படையில் ரூபா 30,229.47 மில்லியனுக்கான 03 கடன் செயற்திட்டங்களின் கீழ் காணப்படுகின்ற சாக்கடை முறைமையினை புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் சாக்கடை வசதிகள் காணப்படாத பகுதிகளுக்கு சேவைகளை விரிவாக்கலை குறிக்கோளாகக் கொண்டு 2010 ஆண்டு முதல் கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. 2022 ஜனவரி 01 திகதியளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 03 கழிவுநீர் பம்பு நிலையங்கள் கொழும்பு மா நகர சபைக்கு உரித்தாக்கப்பட்டது. இந்த சாக்கடை வடிகால் முறைமை பாதுகாப்பான முறையில் பேணிச் செல்வதற்காக கட்டணம் தீர்மானிக்கப்பட்டு நிதியம் ஒன்று உருவாக்கல், முறைமையின் செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளல், சுற்றாடல் மற்றும் சமூக சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்காக 2017 ஆண்டில் வரைபு செய்யப்பட்ட சாக்கடை கட்டண முறைமைக்குரிய துணை விதிகள் 2021 திசெம்பர் 31 திகதி வரை வழுப்படுத்தி செயற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | 2019 ஆண்டின் போது மேல் மாகாண சபை கலைக்கப்பட்டிருந்தமையால் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது. புதிய வரைபு ஒன்றென பொதுக் கூட்டத்தில் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக 2022 ஆண்டின் போது ஆளுனருக்கு அனுப்பப்பட்டுள்ளது. துணை விதிகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கட்டணம் அறவீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | துணைவிதிகள் விரைவாக அங்கீகரித்தல் மற்றும் சாக்கடை கட்டண முறைமை ஒன்று விரைவாக செயற்படுத்துதல். |

### 4.2 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு மா நகர சபையின் 47 வீதவரி பிரிவுகள் அடங்கியுள்ளதுடன் 06 பிராந்திய அலுவலகங்கள் மூலம் | தற்போது சேகரிக்கப்படும் குப்பைகள் கெரவலபிட்டிய waste to energy | சபையின் சேகரிக்கப்படும் குப்பையை ஆதனம் ஒன்றாக மாற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | சபை மற்றும் தனியார் கம்பனிகளுடன் இணைந்து திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக 2021 ஆண்டின் போது ரூபா 2,982,388,253 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டு இருந்தது. திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவச் செலவு சபையின் 2021 ஆண்டின் தேறிய மீண்டுவரும் வருமானத்தில் 38 சதவீதம் என அவதானிக்கப்பட்டதுடன், மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின் பிரகாரம் மா நகர சபையில் சேகரிக்கப்படும் குப்பைகளை சபையின் ஆதனம் ஒன்றாக மாற்றுவதற்காக நடவடிக்கை எடுக்காமையால் இச் செலவு சபைக்கு செலவுப் பொறுப்பொன்றாக காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்திற்கு இலவசமாக போடப்படுவதனால் பாரிய நிதியொன்று சேகரிக்கப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை எடுத்தல். |

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 4 திணைக்களங்களில் இருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமான மதிப்பீட்டுக் கூட்டுத்தொகை ரூபா 657,638,000 தொகையாகக் காணப்பட்டதுடன், அவற்றின் உள்ளவாறான வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 1,099,007,416 ஆகக் காணப்பட்டது. அதன் படி பாதீட்டு வருமானத்தை மிகைத்து உள்ளவாறான வருமானம் ரூபா 441,369,416 இனால் அதிகரித்திருந்ததுடன், வருமான விடயங்களின் முரண்கள் 07 சதவீதம் முதல் 947 சதவீதம் வரையான வீச்சில் பரவியிருந்தது. அதே போல் 15 வருமானத் தலைப்புகளுக்கு உரிய தொடர்பாக பாதீட்டு வருமானம் ரூபா 810,268,000 தொகையாகக் காணப்பட்டதுடன், அதன் உள்ளவாறான வருமானம் ரூபா 1,858,571,451 தொகையாக இருந்தது. உள்ளவாறான வருமானம் ரூபா 1,048,303,451 தொகையினால் அதிகரித்திருந்ததுடன், சதவீதமாக 05 சதவீதம் முதல் 443.790 இற்கான வீச்சில் பரவியிருந்தது. 15 திணைக்களங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமான மதிப்பீட்டின் கூட்டுத்தொகை ரூபா 14,806,946,000 தொகையாக | எதிர்காலத்தில் இந்த நிலைமையை குறைக்கக் கூடிய விதமாக பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | தத்வரூபமான பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன், அதன் உள்ளவாறான வருமானம் ரூபா 10,457,122,919 ஆக காணப்பட்டது. அதன் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களிடையே வித்தியாசம் ரூபா 4,349,823,081 தொகையாக காணப்பட்டதுடன், சதவீதமாக 07 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை பரந்து காணப்பட்டது. | | |
| (ஆ) | சபையின் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மதிப்பீட்டு வருமானம் உள்ளபடியான வருமானம் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் பரிசோதனை செய்தபோது 07 நிகழ்ச்சித் திட்டங்களின் 10 வருமானத் தலைப்புகளுக்குரிய மதிப்பீட்டு வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 362,501,000 தொகையாக காணப்பட்ட போதிலும் 2021 ஆண்டின் போது வருமானம் ஏதும் உழைப்பதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது. | பொருளாதார நெருக்கடிகள் காரணமாக உதவி நிதிகள் கிடைத்திருக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | தத்வரூபமான பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |

**4.4 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்திகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி இலக்கம் 43, பான்ஸ் இடம் கருவாத் தோட்டத்தில் அமைந்துள்ள 154.43 பர்சஸ் அளவான காணி உரிமையாளரினால் ஒரு வருட காலத்தினுள் வீதவரி செலுத்தாமையால் மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் இலக்கம் 263 பிரிவின் பிரகாரம் 1974 ஒக்தோபர் 07 திகதி கொழும்பு காணிப் பதிவு அலுவலகத்தில் கொள்வனவு சான்றிதழ் பதிவு செய்து ஆதனத்தின் சட்டரீதியான உரிமை சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியளவிலும் காணியின் அனுபவிக்கும் உரிமையை நகர சபைக்கு உரித்தாக்குவதற்கு செயற்படுத்தியிருக்கவில்லை. | அனுபவிக்கும் உரிமையை பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு மா நகர சபையின் சட்டத் திணைக்களத்தினால் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் 63194/5/16 இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு 2022 நவம்பர் 24 திகதி அழைக்கப்படவுள்ளது. | காணியின் அனுபவிக்கும் உரிமை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | க்ளிப்டன் மகளிர் வித்தியாலயத்தின் பின் பகுதியில் அமைந்துள்ள மதிலின் மீது அதற்கு அண்மையில் நிர்மாணவேலை மேற்கொண்டிருந்த அங்கீகாரமற்ற நிர்மாண வேலையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, | அங்கீகாரமற்ற நிர்மாணவேலைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | 2016 பெப்வரி 28 திகதியளவில் ரூபா 200,863,837 இற்கான செலவொன்று மேற்கொண்டு கொழும்பு 12 பெரடைஸ் இடத்தில் அமைந்துள்ள லொன்டரி தரைப் | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | முறைசார் விதமாக வீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பெரடைஸ் வீடமைப்பு திட்டத்தில் 64 வீடுகளை வழங்குவதற்கு உரிய வதிபவர்களுக்கு மற்றும் குறைந்த வருமானம் உடைய வீடுகள் இன்றிய பொது மக்களுக்கு வழங்குவதற்காக 2021 திசெம்பர் 31 அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | சபைக்கு சொந்தமான மோதர Elie House காணியின் 50 பர்சஸ்கள் 1992 ஜுலை மாதம் நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த காணியின் மீதியான 60 பர்சஸ்களையும் அங்கீகாரமின்றி அந்த நிறுவனத்தினால் தமது அலுவல்களுக்கு பயன்படுத்தப்பட்டு இருந்து என அவதானிக்கப்பட்டது. அங்கு அங்கீகாரமின்றிய நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது என கண்டறியப்பட்ட போதிலும் அந்த அங்கீகாரமின்றி பயன்படுத்துவதை மற்றும் அங்கீகாரமின்றிய நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கை ஏதும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைக் குத்தகை அறவீடு செய்வதற்காக மற்றும் விரைவாக சட்ட நடவடிக்கை எடுத்தல். |
| (உ) | கொழும்பு மா நகர சபைக்கு சொந்தமான கொழும்பு 08 எல்விடிகல மாவத்தை பொரளை மயான நிர்வாகியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அமைந்த தரைப் பகுதியில் 2 ஆம் இலக்க காணித் துண்டு நில வரைபில் 48 ஆம் இலக்க காணித் துண்டு அமைந்துள்ள 11 பர்சஸ் காணியில் 6000 சதுர அடியினைக் கொண்ட இரண்டு மாடிகள் அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரமின்றிய நிர்மாணவேலைகள் 2021 திசெம்பர் 31 திகதி வரை அகற்றப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. | குறிப்பிட்ட ஆதனங்களை சபைக்கு உரித்தாக்குவதற்கு சட்ட நடவடிக்கை எடுத்தல். |
| (ஊ) | இலக்கம் 20 பொரளை மெகசின் பாதையில் அமைந்துள்ள 17.7 பர்சஸ் காணி 1983 செப்தெம்பர் 13 திகதி முதல் ஒரு வருடத்திற்காக குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 திகதி வரை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1,025,871 இற்கான நிலுவைக் குத்தகை 2021 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கும் மற்றும் குத்தகை உடன்படிக்கையை நாளதுவரை ஆக்கல். |
| (எ) | கொழும்பு மா நகர சபைக்கு சொந்தமான 12 தனிப்பட்ட வீடுகள் நபர்களுக்கு உரித்தாக்கப்பட்டிருந்ததுடன் இவ் வீடுகளில் 11 வீடுகளின் வாடகைப் | சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கும் மற்றும் குத்தகை உடன்படிக்கையை |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி பல வருட காலமாக பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. இந்த வீடுகள் அமைந்துள்ள இடம் அனுபவிப்பது யார் வீடுகளின் சதுர அடி எண்ணிக்கை மற்றும் வீடுகளின் உளமை தொடர்பாக தகவல்கள் நகர சபையிடம் காணப்படவில்லை. | | நாளதுவரை ஆக்கல். |
| (ஏ) | கட்டிட வரைபு இலக்கம் ME/PBC/BA/01/18 கீழ் 32 ஆம் இலக்க முதலிகே மாவத்த கொழும்பு 01 வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 07 மாடிகளைக் கொண்ட 2143.75 சதுர அடி கட்டிடம் (B+G+6) மற்றும் வளவினை இடப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>• அங்கீகரிக்கப்பட்ட வரைபில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள வெற்றிச் சந்தர்ப்பங்களை அடங்கக் கூடிய விதமாக 05 மாடிகளைக் கொண்ட 533.46 சதுர மீற்றர்களைக் கொண்ட அங்கீகாரமற்ற கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.<br>• அங்கீகரிக்கப்பட்ட வரைபின் படி தரைமாடி நில மட்டத்தில் காணப்பட வேண்டியிருந்த போதிலும் கட்டிடத்தின் தரை மாடி நிலமட்டத்தை விட 380 மில்லிமீற்றர் உயர்த்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.<br>• அங்கீகரிக்கப்பட்ட வரைபின் படி முதலிகே மாவத்தையின் கடைசிப் பகுதியில் அமைந்துள்ள 12 அடியைக் கொண்ட நடைப்பாதை சாலைக் கோடு (Arcade Line) அடையாளப்பட்டிருந்த போதிலும் அந்த அளவு அடங்கக் கூடிய விதமாக 40.61 சதுர மீற்றர் அங்கீகாரமற்ற நிர்மாண வேலை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>• அங்கீகரிக்கப்பட்ட வரைபின் படி 4 வாகனங்கள் நிறுத்தி வைக்கக் கூடிய விதமாக பேஸ்மன்டில் வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் வாகனங்கள் நிறுத்தி வைக்கக் கூடிய பகுதி களஞ்சியம் ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்ட ரீதியற்ற நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்கு அல்லது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | நகரத்திலுள்ள 100 வருடங்களுக்கு பழமைவாய்ந்த மரங்களின் தண்டு மற்றும் வேர்களின் நிலைமையை அளவை செய்வதற்காக மற்றும் பரிசோதனை செய்வதற்காக 2015 ஆண்டின் போது ரூபா | இயந்திரத்தின் மூலம் வழங்கப்படும் தரவுகள் பகுப்பாய்வு செய்யக் கூடிய உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் | விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 7.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டு காணி மற்றும் சுற்றாடல் அபிவிருத்திப் பிரிவினால் கொள்வனவு செய்திருந்த மரத்தின் கட்டமைப்பை பரிசோதனை செய்யும் இயந்திரம் 2020 திசெம்பர் 31 திகதியளவிலும் 6 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பயன்படுத்தப்படாமல் விஹாரமஹாதேவி பூங்காவின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. | செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் தரவு பகுப்பாய்வுக்காக இயந்திரம் கொள்வனவு செய்தல் நிறுவனத்துடன் கலந்துரையாடல் நடாத்துதல். | |
| (ஒ) | பூந்தோட்ட வீதி நடைபாதை வியாபார தொடர்கட்டிடங்களுக்காக ரூபா 29,325 தொகை வீதம் 200 பக்கி கரத்தைகள் ரூபா 5,865,000 தொகைக்கு 2016 செப்தெம்பர் மாதம் கொள்வனவு செய்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் இந்த பக்கி கடைகள் ஆக்கபூர்வமான கருமங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு முடியாமல் இயற்கை அழிவுகளுக்கு ஆளாகி பாதுகாப்பற்ற முறைமையில் பயன்படுத்தப்படும் நிலைமையில் காணப்பட்டது. | பக்கி கரத்தைகளை பெற்றுக் கொள்வதற்காக வியாபாரிகளினால் மறுக்கப்பட்டதனால் ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்த முடியாமல் போனாலும் அந்த கடைகளுக்கான பக்கி கரத்தைகள் வேறு பொதுச் சந்தை தேவைகளுக்காக எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. | விரைவாக ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். |
| (ஓ) | 2018 மார்ச் 16 திகதி ரூபா 4,242,600 பெறுமதிக்கு கொள்வனவு செய்திருந்த சதுடு உயனவிற்கு பயன்படுத்தப்படும் கங்காரு ரைடர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு 2 மாதங்களுக்குள் உடைந்திருந்தமையால் 2018 ஆண்டு முதல் பாவணையில் இருந்து அகற்றப்பட்டுள்ளது. இந்த நட்டத்தை ஈடுசெய்வதற்காக வழங்கு நிறுவனத்தினால் சமர்ப்பித்திருந்த ரூபா 2,723,735 இற்கான செயலாற்றுகை பிணைமுறியை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அதன் மூலம் அணவல் செய்யப்பட்ட ரூபா 2,154,564 நிதி நட்டத்தின் 2021 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஔ) | நகர செயலாளர் திணைக்களத்திற்கு உரிய வாகனம் ஒன்று 2017 செப்தெம்பர் 4 திகதி விபத்துக்கு உள்ளாகியமையால் சபைக்கு ஏற்பட்டிருந்த ரூபா 131,462 இற்கான நட்டம் அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய முன்னால் நகர செயலாளரிடம் அறவீடு செய்வதற்காக 2021 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணத்தை அறவீடு செய்வதற்காக பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்று தயாரித்துத் தரும்படி மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி செயலாளருக்கு 2021 திசெம்பர் 24 திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஃ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பார்கின் மீற்றர் பொருத்தி வாகனங்களை நிறுத்துவதற்காக வாடகை அறவிடப்படல் தொடர்பாக தனியார் கம்பனி ஒன்றுடன் 2016 மார்ச் 28 திகதி 53/2016 இலக்கங் கொண்ட உடன்படிக்கை மூலம் உடன்பட்டிருந்தது. எனினும் குறிப்பிட்ட கம்பனி உடன்படிக்கையின் பிரகாரம் வாடகைத் தொகை செலுத்தாமையால் சபையில் பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்காமையால் அறவீடு செய்யப்பட வேண்டிய நிலுவை வாடகை பெறுமதி ரூபா 101,161,649 தொகை 2021 திசெம்பர் 31 திகதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |